Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 3, 2022

திங்கட்கிழமை ஒக்டோபர் 02, 2022 | ஒளி: 08 கதிர்: 112 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



# மின்வெட்டில் மாற்றம் இல்லை

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கி இயங்க ஆரம்பித்தாலும் மின்வெட்டு நேரத்தைக் குறைக்க முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய அறிவிக்கப்பட்ட 2 மணி நேரம் 20 நிமிடங்கள் என்ற மின் வெட்டு தொடரும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் 3ஆம் மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட கோளாறு சரி செய்யப்பட்டு, மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சனிக்கிழமை (01) தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2



# பெற்றோல் விலை குறைந்தது

92 ரக பெற்றோலின் விலை லீற்றருக்கு 40 ரூபாயாலும் 95 ரக பெற்றோலின் விலை லீற்றருக்கு 30 ரூபாயாலும் நேற்று முன்தினம் (01) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

5 மூலப்பொருட்களுக்கு

# வரி நீக்கம்

### சுகாதார அணையாடைக்கு வரிச்சலுகை வழங்க தீர்மானம்

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் சுகாதாரத்தை உறுதி செய்தல் மற்றும் சுகாதாரப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், உள்நாட்டில் சுகாதார அணையாடைகளை தயாரிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பிரதான 05 மூலப்பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்கு வரிச்சலுகையை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



அரசாங்கத்தின் மேற்படி தீர்மானத்துக்கமைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 சுகாதார அணையாடைகள் அடங்கிய ஒரு பக்கற்றின் விலை 50 தொடக்கம் 60 ரூபாவால் குறைவடையும் என்றும் அதிகபட்ச சில்லறை விலை 260 தொடக்கம் 270 ரூபாயாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் முடிவுப்பொருட்களின் நுகர்வோர் சில்லறை விலைகளும் 18% அல்லது 19% ஆல் குறைவடையும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக வரிச்சலுகை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

உற்பத்தியாளர்கள் இந்த மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் உரிய வரிச் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதால், அதற்கான செயன்முறைகளை தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



# கட்டணம், விலைகள் குறையாது

### ஓட்டோ, பஸ், பேக்கரி, உணவக சங்கங்கள் அறிவிப்பு

பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும் பஸ் கட்டணம் குறைக்கப்படாது என பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளதுடன், ஓட்டோ கட்டணத்தில் எவ்வித குறைப்பும் செய்யப்படமாட்டாது என்று ஓட்டோ தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பெற்றோலின் விலையை குறைத்துள்ள போதிலும் டீசல் விலை குறைக்கப்படவில்லை என்பதால், கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# அரச ஊழியர்களின் சம்பளம் குறையாது

### நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி

ஒக்டோபர் மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படும் என சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திகளை மறுத்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட மாட்டாது என்று உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2



# இந்தியா எப்போதும் துணை நிற்கும்

இலங்கையிலுள்ள சகல மக்களுடனும் இந்தியா எப்போதும் துணைநிற்பதாக குறிப்பிட்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோப்பால் பாக்லே, இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவால் தற்போதைய நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ள முடிந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை நேற்று (02) (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொண்டிருந்த அவர், திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று தரிசித்ததுடன் ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2



அதியுயர் பாதுகாப்பு வலய வர்த்தமானியை

# நாடு திரும்பியவுடன் இரத்து செய்தார் ஜனாதிபதி

கொழும்பில் உள்ள பல முக்கிய இடங்களை அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி அண்மையில் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யும், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சனிக்கிழமை (01) வெளியிடப்பட்டது

தொடர்ச்சி P2

# 'கை'யில் சிலருக்கு நோய்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கு நோய் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, பதவிகள் இன்றி வாழமுடியாத நோயே அவ்வாறானவர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அதிகாரத்தில்



இருந்தாலும் அவ்வாறானவர்களுக்கு பதவி இல்லாமல் இருக்கமுடியாது என்றும் மைத்திரிபால சிறினே குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# 12 மில். டொலர் பெறுமதியான மருந்துகள் கையளிப்பு

12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்க அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

பொருளாதார நெருக்கடிக்கான

# காரணங்களை கண்டறிய முஸ்தீபு

இலங்கையில் இடம்பெற்ற பொருளாதார குற்றங்கள் தொடர்பான விடயங்களை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் விளக்கியிருந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை கண்டறிவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

# போதைப்பொருளை ஒடுக்க புதிய விசேட செயலணி

போதைப்பொருளைக் கொண்டு வருதல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் பாவனை செய்தல் போன்றவற்றை ஒடுக்குவதற்கு புதிய விசேட செயலணியொன்று நியமிக்கப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# பெட்ரோசினாவுடன் அமைச்சர் பேச்சு

மிகப் பெரிய பெற்றோலிய விநியோக நிறுவனங்களில் ஒன்றான 'பெட்ரோசினா' அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலில் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஈடுபட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# சில சிகரெட் வகைகளின் விலை ரூ.5 ஆல் உயர்வு

கோல்ட் லீஃப் மற்றும் பென்சன் அன்ட் ஹெட்ஜஸ் ஆகிய சிகரெட்களின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம், நேற்று (02) தெரிவித்தது.

அதற்கமைய, கோல்ட் லீஃப் சிகரெட் ஒன்றின் புதிய விலை 85 ரூபாயாகவும், பென்சன் அன்ட் ஹெட்ஜஸ் சிகரெட்டின் புதிய விலை 90 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி, சனிக்கிழமை (01) முதல் அமல்படுத்தப்படுவதே இந்தச் சிகரெட்டுகளின் விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

சபுகஸ்கந்த ஆலையால்

# காற்றில் கலக்கும் கந்தக நாற்றம்

### தரமற்ற மசகு எண்ணெய் காரணமா?

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து எழும் கடும் துர்நாற்றம் காரணமாக, பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக, சுத்திகரிப்பு நிலையத்துக்கு அண்மையில் வசித்து வரும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கடந்த சில நாள்களாக வீசும் அதிக துர்நாற்றம் காரணமாக, தமது அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக பியகம பிரதேச சபையின் தலைவர்

தொடர்ச்சி P2



# இந்தோனேசிய கால்பந்து துன்பியலில் 174 பேர் பலி



இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் இடம்பெற்ற கால்பந்து போட்டியின் பின்னர் ஏற்பட்ட, கலவரம், கூட்ட நெரிசல், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர் குண்டுப்பிரயோகத்தில் ஏற்பட்ட மூச்சுத்திணறல் ஆகிய காரணங்களால், குறைந்தது 174 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கஞ்சுருஹான் விளையாட்டு மைதானத்தில் கால்பந்து இரசிகர்களிடையே மூண்ட கலவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகை குண்டு பயன்படுத்தியதால் அதிலிருந்து இரசிகர்கள் தப்பியோட முயன்ற போது இந்தகக் கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அரேமா எப்.சி என்னும் அணியினர் அவர்களின் பரம எதிராளி அணியான பெர்சேபயா சுராபயா எனும் அணியிடம் தோல்வி அடைந்த பின்னரே, இரசிகர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டு, மோதலானாது.

அந்த விளையாட்டு மைதானத்தில் சுமார் 38,000 பார்வையாளர்கள் மட்டுமே அமர முடியும். எனினும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# வரி நீக்கம்

அதற்கமைய 05 பிரதான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்றபோதும், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியின்போதும் 15% சுங்க இறக்குமதி வரி, 10% -15% செஸ் வரி மற்றும் 10% துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி ஆகியன நடைமுறையிலிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சுகாதார அணையாடைகளுக்கு பூச்சிய சதவீத வற் வரி அறவிடப்படும் என்பதுடன், சுகாதார அணையாடைகளை முடிவுப்பொருட்களாக இறக்குமதி செய்பவர்களுக்கும் பூச்சிய சதவிகித வற் வரியின் அனுகூலம் கிடைக்கும்.

நெருக்கடியான காலகட்டத்திற்கு ஏற்றவாறு இச்சலுகைகள் அமல்படுத்தப்படுவதாக ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார அணையாடைகளின் இறக்குமதிக்கு விதிக்கப்படும் அதிக வரி காரணமாக அதன் விலை உயர்வடைந்துள்ளதால், இறக்குமதி வரியை குறைக்குமாறு உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அண்மையில் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோல்...

அதற்கமைய 92 ரக பெற்றோலின் புதிய விலை 410 ரூபாயாகவும் 95 ரக பெற்றோலின் புதிய விலை 510 ரூபாயாகவும் குறைவடைந்ததுடன், ஏனைய எரிபொருட்களின் விலையில் மாற்றம் இல்லை என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு அறிவித்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்தைத் தொடர்ந்து, லங்கா ஐஓசி நிறுவனமும் பெட்ரோல் விலையைக் குறைப்பதாக அறிவித்தது.

## 12 மில்....

இதுவரை, 03 தடவைகளில், சுகாதார அமைச்சுக்கு மருந்துப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில், இதன் இறுதிக் கட்டமாக இன்னுமொரு தொகை மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இலங்கை அரசாங்கத்திடம் நேற்று (02) ஒப்படைக்கப்பட்டன.
அமெரிக்காவின் பிரபல மனிதாபிமான உதவி அமைப்புகளுடன் இணைந்து, இலங்கைக்கு மருந்துகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை இலங்கைத் தூதரகம் முன்னெடுத்திருந்தது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்த அமைப்புகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற விரும்புவதாக அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நஷனல், ஹோப் வேள்ட்வைட், அமெரிகெயார்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு தனது நன்றிகளையும் அவர் தெரிவித்தார்.

ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நஷனல் நிறுவனம் கடந்த ஜூலை மாதம் 9.131 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகளை கையளித்திருந்ததுடன், 773,000 அமெரிக்க டொலரிலும் அதிக உதவியை அமெரிகெயார்ஸ் நிறுவனம் செப்டம்பர் மாதம் இலங்கைக்கு வழங்கியிருந்தது.

மேலும், ஹோப் வேள்ட்வைட் நிறுவனம் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு அனுப்பவுள்ள உதவிப் பொருட்களின் பெறுமதி 1.74 மில்லியன் அமெரிக்க டொலரை விடவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருளை...

போதைப்பொருள் பாவனை, வைத்திருத்தல் மற்றும் விநியோகித்த குற்றங்களுக்காக பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ள காரணத்தால் சிறைச்சாலைகளில் நெரிசல் அதிகரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.
இவ்வாறான நபர்களை மீண்டும் சமூகத்துடன் இணைக்கும் வகையில் அவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்புவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.
பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் ஆபத்துகள் குறித்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கல்வி புகட்டுவது உள்ளிட்ட தேசியகொள்கையை வகுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## இந்தியா எப்போதும்...

அதனைத் தொடர்ந்து திருகோணமலை நகராட்சி மன்றத்தின் நகர மண்டபத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு 200 பேருக்கான உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை பிரதிநிதித்துவப்படுத்தி இந்நிகழ்வில் கலந்துகொண்ட த.தே.கூட்டமைப்பின் எம்.பியான த.கலையரசனுடன் கலந்துரையாடிய உயர்ஸ்தானிகர் நல்வாழ்த்துகளையும் பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்றபோது. அங்கு பாரம்பரிய ரீதியில் தனக்கு வரவேற்பளித்த சிறுமிகளுடன் புகைப்படத்தை எடுத்துக்கொண்டார்.

அத்துடன், அண்மைய காலப்பகுதியில் நடைபெற்ற அகழ்வுப்பணிகளின்போது, மீட்கப்பட்டதும் சோழர்காலத்துக்குரியதெனக் கூறப்படுவதுமான நந்தி சிலையின் பின்னணியில், இந்தப் படத்தை எடுத்துக்கொண்டார்.

## அரச...

இந்த விடயம் தொடர்பில் நேற்றைதினம் (02) அறிக்கை வெளியிட்ட அமைச்சர், மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.
அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பது குறித்த எந்தவொரு தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்றும் அவர் உறுதியளித்தார்.
பொதுமக்களை குழப்பும் வகையில் திட்டமிட்ட பிரசாரத்தை மேற்கொள்ளும் நபர்களால் இந்தசச் செய்திகள் பரப்பப்படுவதாக குற்றம் சுமத்திய அவர், அரச ஊழியர்களின் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

## காரணங்களை...

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டுமாயின் இந்த நாட்டில் வேரூன்றியிருக்கும் ஊழல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும், இலங்கையில் கடந்த கால மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.
இந்தநிலையில், பல்வேறு அரசியல் காரணங்களால் அவ்வப்போது தேசிய கொள்கைகளில் மாற்றம் கொண்டுவருவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, நாட்டின் பொருளாதாரத்துடன் நேரடியாக தொடர்புடைய தேசிய கொள்கைகளை அமல்படுத்துவது தொடர்பான அமைச்சுகள் மற்றும் தற்போது செயற்படும் அமைச்சுகளிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சுகளின் விடயதானங்களை வகுக்கும் போது, தேசிய நலனை புறக்கணிப்பது போன்ற காரணங்களால், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கொள்கை ரீதியில் தீர்மானங்களை மேற்கொள்வதால், பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட விதம் ஆகியன தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இதற்கு பல பொருளாதார நிபுணர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ள ஆணைக்குழு, பொருளாதார வீழ்ச்சியின் ஊடாக மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதன் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.



## நாடு திரும்பியவுடன்...

1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க அரச இரகசியச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், கடந்த செப்டம்பர் 16 ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிட்ட அதி உயர் பாதுகாப்பு வலயங்களின் பிரகடன வர்த்தமானியே இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் அல்லது மேல் மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் எழுத்துமூல முன்அனுமதியின்றி குறித்த அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் கூட்டங்கள் அல்லது ஊர்வலங்களை நடத்த முடியாது என வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டது.

எவரேனும் இந்த கட்டளையை மீறினால் பிடியாணை இன்றி கைது செய்யப்பட முடியும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தை தவிர பிணை வழங்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாராளுமன்ற வளாகம், உயர்நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வளாகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, இலங்கை கடற்படைத் தலைமையகம், பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அக்குரேகொட இலங்கை இராணுவத் தலைமையகம், கொம்பனித் தெரு விமானப் படைத் தலைமையகம் மற்றும் பிளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகம் ஆகியவை அதியுயர் பாதுகாப்பு வலயங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் கீழ் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தியமை எந்த நியாயமும் அடிப்படையும் இல்லாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

மேலும், அதியுயர் பாதுகாப்பு வலய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வலிதற்றதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு சட்டமா அதிபரால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பெட்ரோசினாவுடன் அமைச்சர்...

இந்தக் கலந்துரையாடலில் நிறுவனத்தின் பிரதித் தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டதாக, அமைச்சர், நேற்று (02) டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள், மீள செலுத்தும் முறைமைகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தொடர்ச்சியான விநியோகத்தை மேற்கொள்வது குறித்து ஆராயப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பெட்ரோசினா அதிக அளவில் எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளதுடன், 10 ஆண்டுகளாக சிறந்த புரிந்துணர்வை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வெளிநாட்டு எண்ணெய் விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளதாக அறியமுடிகிறது.



## மின்வெட்டில் மாற்றம்...

அலகு 1 மற்றும் அலகு 3 ஆகிய இரண்டும் முழு திறனில் இயங்குவதாக குறிப்பிட்ட அமைச்சர், 2ஆம் அலகின் பராமரிப்பு பணிகள் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டார்.

900 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கும் குறித்த மூன்று மின் பிறப்பாக்கிகளில் இரண்டு பிறப்பாக்கிகள் செயற்பட ஆரம்பித்துள்ளமையால் தேசிய மின் கட்டமைப்புக்கு 600 மெகாவோட் மின்சாரம் கிடைக்கப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எரிபொருளின் தரம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதையடுத்து ஆரம்பிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் தொடரும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கட்டணம், விலைகள்...

பஸ் கட்டணத்தில் எவ்வித குறைப்பும் இடம்பெறாது என்று அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனத்தின் தலைவர் அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டார்.

இதேவேளை, பெற்றோலின் விலை குறைக்கப்பட்டாலும் ஓட்டோ கட்டணத்தில் எவ்வித குறைப்பும் ஏற்படாது என ஓட்டோ சாரதிகள் சங்கம் தெரிவித்தது.

பயணிகள் போக்குவரத்துக்கு தேவையான பெற்றோலை அரசாங்கம் வழங்குவதில்லை என்ற காரணத்தாலே கட்டணக் குறைப்பு இல்லை என்று சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், 5 லீற்றர் கோட்டாவை அரசாங்கம் அதிகரிக்குமாயின் கட்டணத்தை திருத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெ ற்றோல் விலை குறைந்துள்ள போதிலும் பேக்கரிகள் மற்றும் உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட மாட்டாது என்று உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் ஏனைய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டால் மாத்திரமே பால் தேநீர் உள்ளிட்ட உணவு மற்றும் பானங்களின் விலையை குறைக்க முடியும் என சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

## ‘கை’யில் சிலருக்கு...

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள், கீழே விழுந்து தலையைத் தூக்கிய தலைவர்கள் என்று தெரிவித்த அவர், எதிர்வரும் தேர்தலின் போது, ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் இல்லாதவர்களுக்கு வேட்பு மனுக்களை கொடுப்பது கட்சியின் பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சின்னம் ‘கை’ என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சில சிகரெட்...

இதேவேளை, நிறுவனத்தின் ஏனைய சிகரெட் தயாரிப்புகளான கப்டென், டன்ஹில், பிரிஸ்டல் ஆகிய சிகரெட்டுகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் நிறுவனம் தெரிவித்தது.

கடந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைய, 140 பில்லியன் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் எதிர்பார்ப்பில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை அரசாங்கம் அமல்படுத்தியிருந்தது.

மேற்குறிப்பிட்ட வரி விதிப்பால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மேலும் உயரும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## காற்றில் கலக்கும்...

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் புகையில், கந்தகத்தின் அளவு அதிகரித்துள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு தரமற்ற மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

அதை மறுத்திருந்த மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்தோனேசிய கால்பந்து...

42,000 பேர் அங்கு கூடியிருந்தனர் என்று இந்தோனேசியாவின் தலைமை பாதுகாப்பு அமைச்சர் மஹ்பூத் எம்டி தெரிவித்துள்ளார்.

கால்பந்து போட்டி முடிந்து கடைசி விசில் ஊதப்பட்ட பின்னர், இரசிகர்கள் மைதானத்துக்குள் ஓடிவந்தனர். அவர்களை கலைப்பதற்காக, பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீசினர்.

அத்துடன், அந்தக் கூட்டத்திலிருந்து இரசிகர்கள் வேலிகள் மீதேறி தப்பிக்க முயல்வதை காணமுடிந்தது.

இந்நிலையில், பாதுகாவலர்கள் அல்லது காவல் துறையினர் இரசிகர்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் புகைக்குண்டு பிரயோகம் மேற்கொள்ளப்படக் கூடாது என்று சர்வதேச கால்பந்து கட்டுப்பாட்டு அமைப்பான பிஃபா கூறுகிறது.

விசாரணை முடியும்வரை இந்தோனேசியாவில் கால்பந்து லீக் போட்டிகள் அனைத்தையும் நிறுத்தி வைக்க அந்நாட்டு ஜனாதிபதி ஜோகோ விடோடோ கட்டளையிட்டுள்ளார்.

கால்பந்து போட்டிகளின் போது இந்தோனிசியாவில் வன்முறை சம்பவங்கள் நடப்பது புதிதல்ல. அரேமா எஃப்.சி மற்றும் பெர்சேபயா சுராபயா ஆகிய அணிகள் மிகவும் நீண்ட நாள் பகையாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 1964இல் பெரு மற்றும் ஆர்ஜென்டினா அணிகளுக்கு இடையே நடந்த ஒலிம்பிக் தகுதிச்சுற்று ஆட்டத்தின் பின் உண்டான கூட்ட நெரிசலில் 1,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்; 320 பேர் உயிரிழந்தனர்.

பிரிட்டனின் ஹில்ஸ்போரோ மைதானத்தில், அதிக கூட்டம் இருந்த மைதானத்தின் தடுப்பு சரிந்து விழுந்ததில் லிவர்பூல் அணியின் கால்பந்து ரசிகர்கள் 96 பேர் 1989இல் உடல் நசுங்கி இறந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக

# கடுமையான சட்டங்கள் அமல்படுத்த வேண்டும்

இலவசக் கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் சாசனம் இன்னும் அதிக ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தற்போது, போசாக்கு குறைபாடு காரணமாக சிறுவர்கள் பல கடுமையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் போன்ற வரப்பிரசாதங்கள் எதுவுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள்சார் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி என்பது சம்பிரதாய ரீதியான எதிர்க்கட்சியல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தேசத்தின் குழந்தைகளை டிஜிடல் உலகினில் வளமுள்ளவர்களாக உருவாக்குவதே எங்களின் ஒரே இலக்காகும். அந்த இலக்கை மனதில் கொண்டு 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தை நமது எண்ணக்கருவாகக் கொண்டு செயற்படுகின்றோம். அந்த எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தி



தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கப்படுவதாகவும் கூறினார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி 'பிரபஞ்சம்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 35 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பஸ், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உணவகங்கள் 2 ஆயிரத்துக்கு பூட்டு

நாட்டில் ஏற்பட்டுள்ள கோதுமை மாவின் தட்டுப்பாட்டால் சுமார் 2 ஆயிரம் உணவகங்களை மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவை விநியோகிக்கும் இரு பிரதான நிறுவனங்களும் போதுமான அளவு கோதுமை மாவை விநியோகிப்பதில்லை, இதனால், 7 ஆயிரம்



உணவகங்களில் சுமார் 2 ஆயிரம் உணவகங்கள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

கப்பல் ஒன்றிலிருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு 15 மில்லியன் டொலர் செலவிடப்படுகின்றது. ஆனால், டொலரைப் பெற்றுக்கொள்வதில் கோதுமை மா இறக்குமதி நிறுவனங்கள் சிரமங்களுக்கு முகங்கொடுக்றின்றன.

கோதுமை மாவின் வரையறுக்கப்பட்டு விநியோகச் செயற்பாடுகளால், 50 கிலோ கிராம் கோதுமை மாவைப் பெற்றுக்கொள்ள 13,500 ரூபாயை சில உணவகங்கள் செலவிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாரிய விளைவுகளை நாடு சந்திக்கிறது

வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவகையில் அந்நிய செலாவணி பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுத்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட நாட்டிலிருந்து அதிகளவான அந்நிய செலாவணி வெளியேறுகிறது. இதன்விளைவாக பாரிய விளைவுகளுக்கு நாடு முகங்கொடுத்து வருகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள இந்நிலைமைக்கு அரசியல்



தீர்வு இல்லை எனவும் பொருளாதாரத் தீர்வே இருக்கிறது. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல், அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்தல், நாட்டிலிருந்து வெளியேறும் அந்நிய செலாவணியை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட சில தீர்வுகளே இப்பிரச்சினைக்கு இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தியா வருடமொன்றுக்கு 200 டொலர் மில்லியன்களுக்கும் அதிகமான வருமானத்தைப் பெறுகிறது. இதேவேளை தகவல்கள் தொழில்நுட்ப ஏற்றுமதியின் ஊடாக 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குக் கிடைக்கின்றன எனவும் தெரிவித்தார்.

# முன்னணி தமிழ் நடிகர் தர்ஷன் காலமானார்



இறக்குவானையைச் சேர்ந்த இலங்கையின் பிரபல தமிழ் நடிகர் தர்ஷன் தர்மராஜ் நேற்று (02) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 41 ஆகும். திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று (02) காலை அனுமதிக்கப்பட்ட அவர், சிறிது நேரத்தின் பின்னர் உயிரிழந்தார்.

2008ஆம் ஆண்டு முதல் இலங்கையின் குறிப்பாக சிங்கள சினிமா துறையில் சிறந்த நடிகராக விளங்கி வந்த இவர், பல திரைப்பட விழாக்களில் சிறந்த நடிகருக்கான விருதையும் வென்றுள்ளார்.

தர்ஷன் தர்மராஜின் பூதவுடல் கொழும்பில் உள்ள ஜயரத்ன மலர்சாலையில் நேற்று மாலை (02) அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. தர்ஷனின் பிறப்பிடமான இறக்குவானைக்கு இன்று (03) எடுத்துச்செல்லப்பட்டு நாளை (04) இறுதிக்கிரியைகள் நடைபெற உள்ளது.

இலங்கை திரைத்துறையில் மிளிர்ந்து விளங்கிய தமிழ் கலைஞரான அவர், அவரோடு பணியாற்றிய பல தமிழ் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து, இலங்கை தமிழ் திரைத்துறை வளர்ச்சியிலும் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மார்பக புற்றுநோய் அதிகரிப்பு

நாட்டில் நாளாந்தம் 12 பேர் வரையில் மார்பகப் புற்றுநோயுடன் அடையாளம் காணப்படுகின்றனர் என தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் மார்பகப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு தசாப்த காலங்களாக அதிகரித்துச் செல்வதாக விசேட வைத்திய நிபுணர் ஹசரெலி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

மார்பகப் புற்றுநோய் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் நேற்று (01) முதல் இம்மாதம் முழுவதும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் தலைமையில் சர்வதேச குடியிருப்பு தினம்

சர்வதேச குடியிருப்பு தினத்தின் தேசிய வைபவம் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் இன்று (03) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'பாரபட்சம் காட்டாதிருப்போம்; யாரையும் எந்த இடத்தையும் கைவிடாது பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெற உள்ளது.

சர்வதேச குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து நகர்ப்புற குடியிருப்பு மக்களுக்காக ஏற்பாடு செய்திருந்த சிறுவர்களுக்கான ஓவியம், குறும்படம், தோட்டக்கலை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. அத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டு உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் இங்கு இடம்பெறவுள்ளது.

**சர்வதேச குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து நகர்ப்புற குடியிருப்பு மக்களுக்காக ஏற்பாடு செய்திருந்த சிறுவர்களுக்கான ஓவியம், குறும்படம், தோட்டக்கலை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன**



# பெரும்போகத்தை ஆரம்பிக்க முடியும்

பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களை உரிய நேரத்தில் போதுமான அளவில் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேவையான உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய தயார் நிலையில் இருப்பதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களை வழங்குவது குறித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், பெரும்போகத்தில் நெற்செய்கை மற்றும் ஏனைய விவசாய பயிர்ச் செய்கைக்குத் தேவையான சேதன மற்றும் இரசாயன உரங்களை வழங்குவது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, விவசாயிகள் எவ்வித சந்தேகமுமின்றி அடுத்த பெரும்போகத்தில் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

# திடீரென மாயமான மருத்துவ அறிக்கை



கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர் ஒருவரின் மருத்துவ அறிக்கை மாயமாகியுள்ளது.

புகைப்பட ஊடகவியலாளரான ஆரியவம்ச ஜயவீரவை அவரது மனைவி கண்டி வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளார். இதன்போது கடந்த சில வருடங்களாக பெற்றுவரும் மருத்துவ சிகிச்சைகள் தொடர்பான மருத்துவ அறிக்கைகளை தீவிர சிகிச்சைப் பிரிவில் கடமையிலிருந்த தாதியரிடம் ஜயவீரவின் மனைவி வழங்கியுள்ளார்.

எனினும், ஜயவீரவுக்கு சிகிச்சையளிப்பதற்காக வந்திருந்த வைத்திய அதிகாரி இதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட மருந்துகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய மருத்துவ அறிக்கையை ஜயவீரவின் மனைவியிடம் கேட்டுள்ளார். அதனை தான் தாதியரிடம் கையளித்துள்ளதாக கூறியுள்ளார். எனினும், அந்த மருத்துவ அறிக்கை கண்டி வைத்தியசாலையில் இருந்து மாயமாகியுள்ளது

எவ்வாறாயினும் இச்சம்பவம் இடம்பெற்று இரு தினங்களுக்குப் பின்னர் ஊடகவியலாளர் ஆரியவம்ச ஜயவீர உயிரிழந்துள்ளார். எனினும், அவரது மருத்துவ அறிக்கைக்கு என்ன நடந்து என்பது இதுவரையில் தெரியவில்லை என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

# 38 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய கடற்படை





கற்பிட்டி கடலில் அனர்த்தத்துக்குள்ளான படகில் இருந்த 38 இலங்கையர்களை பத்திரமாக கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கற்பிட்டியிலிருந்து பத்தலங்குண்டு தீவு பகுதி நோக்கி உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்சென்ற படகில் திடீரென ஏற்பட்ட நீர் கசிவால், அப்படகு மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து படகின் உரிமையாளர் கடற்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனை தொடர்ந்து விரைந்து செயற்பட்ட கடற்படையினர், மூழ்கும் ஆபத்து ஏற்பட்ட படகில் இருந்த 6 பெண்கள் உள்ளிட்ட 38 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர்.

இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்புக்குள் அனர்த்தத்துக்குள்ளாகும் கப்பல்கள், கடற்றொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை விரைந்து வழங்குவதற்கு தொடர்ந்து கடற்படை தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

ஓர் இனத்தின் இருப்பை அழிக்க வேண்டுமானால்

# முதலில் கைவைக்கின்ற இடம் பண்பாட்டு விழுமியங்களை சிதைப்பது

## இதுவே இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

■ செ. கீதாஞ்சன்



இன்று எங்களுடைய வழிபாட்டு மரபுகள் மறைக்கப்படுகின்றன. குறிப்பாக, தொல்லியல் என்கின்ற போர்வையில், எங்களுடைய தொன்மைகள் மறைக்கப்படுகின்றன அல்லது அழிக்கப்படுகின்ற சூழல் காணப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி. குணபாலன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட பண்பாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:

இங்கு இருக்கின்ற சிவபுரம் சிவன் கோவில் கூட, சோழருடைய காலத்திலிருந்து வழிபாட்டுக்குரிய கோவிலாக இருந்து, 1956இல் குடியேற்றத்தின்போது அது மீளெழுட்சி பெற்ற ஆலயமாக குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறாக எங்கள் கலைகளும் பாரம்பரியங்களும் கலாசார விழுமியங்களும் நிறைந்து இருக்கக்கூடிய ஒரு பிரதேசமாக மாந்தை கிழக்கு பிரதேசம் இருந்தது. 1978ஆம் ஆண்டு வரைக்கும் மாந்தை கிழக்கு பிரதேசம் மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

1978ஆம் ஆண்டு முல்லைத்தீவு தனியான மாவட்டமான பொழுது, முல்லைத்தீவுடன் இணைக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தினுடைய இன்றைய நிலை என்பது, உண்மையிலேயே வேதனை அளிக்கின்றது. எங்களால் போற்றப்பட்டு இருக்கக்கூடிய பாரம்பரியமான வடிவங்கள், எங்களுடைய மரபுகளிலே இருக்கின்றதா?

இன்று, உங்களுக்கு தெரியும், இலங்கையில் இருக்கக்கூடிய பாடசாலைகளில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் மதுவுக்கும் போதைவஸ்துக்கும் அடிமையாகி இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 5,000 மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையை மட்டுமல்ல, வாழ்க்கையில் இருந்தே தூர எறியப்பட்டு இருக்கின்றார்கள். இவை எதற்காக இடம்பெறுகின்றன என்ற கேள்வி, இன்று பல்வேறுபட்ட தரப்பினரிடத்திலும் உள்ளது.

உண்மையில், எங்கள் இனத்தின் இருப்பை அழிக்க வேண்டுமானால், முதலில் அவர்களை, அவர்களின் பாரம்பரிய விழுமியங்களில் இருந்து தூர புறந்தள்ளபட்டவர்களாக மாற்ற வேண்டும். அதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இதனை உணராதவர்களாக நாங்கள் இருக்கிறோம் என்கின்ற வேதனை தான், எங்களுக்கு மிகப்பெரிய பிரச்சினை.

ஆகவே, எமது கலாசார விழுமியங்களை போற்றுகின்ற இந்தப் பண்பாட்டு விழாவில், உறுதி எடுத்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம், இன்னோர் அந்நிய கலாசாரத்தின் ஊடுருவலால், அல்லது எங்களுடைய கலாசாரத்துக்கு எதிராக நடக்கும் எந்த ஒரு நடவடிக்கையாலும் எங்களுடைய மரபுகளை நாங்கள் விட்டுக்கொடுக்காமல், எங்களுக்கென்று பேணப்பட்டு இருக்கக்கூடிய தமிழர்களுடைய கலாசார விடுமியங்களை, பண்பாட்டு அம்சங்களை, பின்பற்றுகின்றவர்களாக அவற்றின்பால் இருக்கக்கூடிய நெறிகளைக் கட்டிக் காப்பவர்களாக, மீண்டும் வடிவம் கொடுப்பவர்களாக, எங்களுடைய கலைகளை மீண்டும் வளர்த்தெடுப்பவர்களாக, எங்களுடைய கலாசாரத்தின்பால் எங்களுடைய பிள்ளைகளை இட்டு செல்பவர்களாக, நாம் மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணேஸ்வரா கோவில் கடைத் தொகுதி சர்ச்சை:

# வேறு இடத்தில் காணி வழங்க உள்ளதாக் தகவல்

## எதிர்ப்பைத் தெரிவித்ததாக சுமந்திரன் தெரிவிப்பு

■ அ. அச்சுதன்



திருகோணேஸ்வரா கோவிலுக்கு செல்லும் பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவற்றைப் பார்வையிடுவதற்காக மாவை சேனாதிராஜா, எம். ஏ சுமந்திரன், திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை (30) சென்றிருந்தனர்.

இதன்போது, கோணேஸ்வரா கோவிலின் புனித தன்மையை சீரழிக்கும் விதத்தில் தெற்கில் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆட்களை கொண்டு வந்து அமர்த்தப்பட்டுள்ளதாக எம்.ஏ சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

ஆனாலும், இவர்களுக்கு இப்பிரதேசத்துக்குள்ளே வேறு இடத்தில் காணிகளை வழங்க உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து நாங்கள் எங்களுடைய எதிர்ப்பினை வெளியிட்டு இருந்தோம்.

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் போது, திருகோணேஸ்வரம் ஆலய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக குழுவொன்று நியமித்திருந்தோம். இருந்த போதிலும், திருகோணமலை மாவட்ட குழுவுடன் பேசுவதற்கு முன்னர், விஜயம் மேற்கொண்டதாக எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இதன் போது தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் கிளை தலைவர் சண்முகம் குகதாஸன், முன்னாள் நகர சபை தலைவர் க. செல்வராஜா (சுப்ரா), கட்சியின் திருகோணமலை மாவட்ட பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஸ் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிப்பு

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 4,000 ரூபாய்க்கு மேல், மின் கட்டணம் உள்ள அனைவரது மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு வருகிறது என கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.ஷ

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், தங்களது மின்கட்டணம் 4,000 ரூபாய்க்கு மேல் உள்ள மின்பாவனையாளர் உடனடியாக கட்டணத்தை செலுத்தி மின்துண்டிப்பை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, கட்டணம் செலுத்தாத நிலையில், மின்இணைப்பு துண்டிக்கப்பட்டால் செலுத்த வேண்டிய மின் கட்டணப் பட்டியலின் முழுத் தொகையையும் செலுத்துவதோடு, மீளஇணைப்பதற்கான மேலதிக கட்டணம் 3,000 ரூபாயும் செலுத்த வேண்டும் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மின்பொறியியலாளர் அலுவலகம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

# நூறு வயதை பூர்த்தி செய்த சந்தானுக்கு கௌரவம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்



சர்வதேச சிறுவர், முதியோர் தினமான நேற்று முன்தினம் (01) மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், சாளம்பன் கிராமத்தில் வசித்து வரும் நூறாவது (100) வயதை, அண்மையில் பூர்த்தி செய்த மனுவேல் சந்தான், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ ஸ்ரான்லி டிமெலால் கௌரவிக்கப்பட்டார்.

தனது 100ஆவது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடிய மனுவேல் சந்தான் என்ற முதியவரை, மாவட்ட அரசாங்க அதிபர் சனிக்கிழமை காலை நேரடியாக அவரது வீட்டுக்குச் சென்று, பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, பணப் பரிசு வழங்கி கௌரவித்திருந்தார்.

இதன் போது, மன்னார் மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் இ. செந்தில் குமார், பங்குத்தந்தை உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பில்

# காணாமல்போன இளைஞன் மயானத்தில் சடலமாக மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில், புதூர் பிரதேசத்தில் காணாமால் போன இளைஞன் ஐந்து தினங்களின் பின்னர் அப்பிரதேச மயானத்தில் உருக்குலைந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். புதூர் 5ம் குறுக்கைச் சேர்ந்த 24 வயதுடைய ஜெயகரன் அருஜன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

புதூர் மயானத்தில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கிடப்பதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கிதை அடுத்து, தடவியல் பிரிவு பொலிஸார் சகிதம் சென்று விசாரணைகளில் ஈடுபட்டபோது, செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறி, காணாமல் போன இளைஞனே ஐந்து தினங்களின் பின்னர் சடலமாக மீடக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலி]hர் மேற்கொண்டு வருகின்றனர்.

2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த

# இடமாற்ற மேன்முறையீடுகளை 13க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

■ எம்.எஸ்.எம் ஹனீபா



கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சூர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்குவது தொடர்பாக கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு இடமாற்ற சபையால் சிபாரிசு செய்யப்பட்ட இடமாற்றப் பட்டியல் விவரங்கள் வெளியிடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்விடமாற்றம் 02.01.2021ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும், இவ்விடமாற்றம் தொடர்பில் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், மேன்முறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் அனைத்தும் அறியத்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்று காரணமாக, 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. அத்துடன் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (அதி சிறப்பு) பதவிக்கான இடமாற்றப் பட்டியல் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிள் ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றி வருகின்ற அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மொழி பெயர்ப்பாளர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர்சேவை, தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் சேவை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்ட அலுவலகர்கள் புதிய சேவை நிலையத்தில் உரிய திகதியில் கடமையை பெறுப்பேற்கும் வண்ணம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும் படி திணைக்கள தலைவர்களை கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா:

# ஒக்டோபர் 06 முதல் மூன்று நாள்களில் எட்டு அமர்வுகள்

## இரண்டாயிரத்து 377 பேருக்குப் பட்டங்கள்

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, ஒக்டோபர் மாதம் ஆறாம், ஏழாம் எட்டாம் திகதிகளில், பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதல் இரண்டு நாள்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் இரண்டு அமர்வுகளுமாக எட்டு அமர்வுகளில் பட்டங்களும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. 184 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 40 உள்வாரி மாணவர்களுக்கும், 153 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் இதன் போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தர், தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் தங்கப் பதக்கங்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

பூநகரி – கிராஞ்சி இலவன் குடா கடற்பகுதியில்

# கடலட்டை பண்ணைக்கு எதிராகப் போராட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட பூநகரி கடற்தொழிலாளர்கள், தமது போராட்ட வடிவத்தை மாற்றியமைத்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை மூன்றாவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பூநகரி, கிராஞ்சி, இலவன் குடா கடல் பகுதியில் பாரம்பரியமாக சிறகு வலை தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்கள் வெள்ளிக்கிழமை (30) மாலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இலவன்குடாவில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன் குடா கடற்பரப்பில், சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை தொழிலாகக் காலாகாலமாகச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில், கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனை தொடர்ந்து கடற்றொழிலாளர்கள், உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சாதகமான முடிவை சம்மந்தப்பட்டவர்கள் வழங்கும் வரை, தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளுக்கு கைகொடுத்து வருகின்ற மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) பணிப்பாளர், பணியாளர்கள் சென்று, போராடும் மக்களோடு கலந்துரையாடி, உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டு, மாற்று வழிகளில் போராட்டத்தை தொடர கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே, குறித்த மக்கள் தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டு, கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமூகப்பணியாற்றுவதற்கு

# யாரை நம்பி யாருடன் இணைவது?

■ நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

தனித்தனியாக நின்று சமூகப்பணியாற்றுவதை விட, ஒருமித்து நின்று சமூகப்பணியாற்றுவது சிறந்தது. ஆனாலும், இப்போதைய சூழ்நிலையில் யார் நல்லவர்கள், யார் சமூக நலன் கொண்டவர்கள், தீய சக்திகள் யார் என யாரை நம்பி, யாருடன் இணைந்து சமூகப்பணியாற்றுவது என்ற அச்சம் எழுந்துள்ளது என சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக் தெரிவித்தார்.

சாய்ந்தமருது ஐக்கிய சமூக முன்னணியின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவும், மேலங்கி அறிமுக நிகழ்வும் அமைப்பின் தலைவர் ஏ.ஜீ. அன்வர் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், பெயரளவுக்கும் சொந்தத் தேவைகளுக்கும் சிலர் அமைப்புகளை பதிவு செய்கிறார்கள். அவர்களின் செயற்பாடு, யாருடைய நிதியையாவது பெறுவதாகவே அமைந்துள்ளது. பிரதேச வேலைத்திட்டங்கள், பொதுப்பணிகளுக்கு அழைத்தால், ஏறத்தாழ 90 பதிவுசெய்யப்பட்ட அமைப்புகள் இருக்கும் சாய்ந்தமருதில் 20 அமைப்புகளே கலந்து கொள்கிறார்கள். பொது அமைப்புகளின் சம்மேளனத்தை நிறுவி, அதனூடாக அவசிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் என்றார்.

குச்சவெளி பிரதேசத்தில்

# தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள்

■ எப். முபாரக்

‘அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு’ எனும் தொனிப்பொருளில், குச்சவெளி பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாத அங்குரார்ப்பன நிகழ்வு சனிக்கிழமை (01) குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஜனாப் ஏ.முபாறக்கால் குச்சவெளி தலைமை அலுவலகம், குச்சவெளி பொது நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து நூலகங்களிலும், அவ் வட்டார உறுப்பினர்கள் ஊடாக தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி, தேசிய வாசிப்பு மாத ‘கட்அவுட்’ தொங்கவிடப்பட்டு வாசிப்பு மாத நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சாய்ந்தமருதைச் சேர்ந்த

# இளைஞர்கள் ஓமான் பயணம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்



சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜே.எச் அப்லால் காரியப்பர் , எம். சஜாத் , எம்.ஏ.எம் றஸ்பாஸ் ஆகிய மூன்று இளைஞர்களும் ஓமான் நாட்டிலுள்ள கிரிக்கட் விளையாட்டுக் கழகமொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு ஓமான் பயணமானார்கள்.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி கிரிக்கட் அணியிலும் சாய்ந்தமருதைச் சேர்ந்த முன்னணி விளையாட்டுக்கழகங்களிலும் விளையாடிய இவர்கள் தேசிய மட்டத்திலும் கடினப் பந்து கிரிக்கட் துறையில் பிரகாசித்தவர்களாவர்.

தலவாக்கலை த.ம.வி எதிர் மின்சார சபை வழக்கு

# 8 வருடங்களின் பின்னர் 'கேட்போருக்கு' சாதகம்

■ சுஜிதா

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய கட்டட நிர்மாணிப்பு தொடர்பில், இலங்கை மின்சார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு, செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் கொத்மலை நீர்மின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் முழுமையாக பாதிக்கப்பட்டு, அதற்கு பதிலாக 7 கட்டட தொகுதிகளை நிர்மாணித்து கொடுப்பதாக இலங்கை மின்சார சபை, மத்திய மாகாண கல்வி அமைச்சினூடாக ஒப்பந்தம் செய்திருந்தது.

அதற்கு அமைய 4 வகுப்பறை கட்டடத் தொகுதிகளை நிர்மாணித்து, எஞ்சிய கட்டடங்கள் மாத்திரம் இழுபறிக்கு மத்தியில் நிர்மாணித்து பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.





எனினும், பாடசாலைக்கு நிர்மாணித்து வழங்க வேண்டிய சகல வசதிகளுடன் கூடிய கேட்போர் கூட கட்டடத்தை நிர்மாணித்து கொடுப்பதில் இலங்கை மின்சார சபையின் மேல் கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் மறுப்பு தெரிவித்திருந்தனர்.

இலங்கை மின்சார சபை, கல்வி அமைச்சுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்திற்கமையவே குறித்த கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டும் என ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும் கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில், பாடசாலையின் அப்போதைய அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மூவர், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் 2014ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தனர்.

அதற்கமைய, எட்டு வருடங்களாக விசாரிக்கப்பட்டு வந்த வழக்கின் தீர்ப்பு செப்டெம்பர் 30ஆம் திகதி மூவர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதற்கமைய, செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடத்தை நிர்மாணித்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை மின்சார சபைக்கு உரியது என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுரிமையை வழங்குமாறு வலியுறுத்தி

# இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம், சிவில் அமைப்புகள் ஆகியன இணைந்து பெருந்தோட்ட மக்களுக்கு வீட்டுரிமையை வழங்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், இன்றைய தினம்(3) கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரித்தானியாரால் 150 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே பெரும்பான்மையான பெருந்தோட்ட குடும்பங்கள் இன்னமும் வாழ்ந்து வரும் நிலையில், சிவில் சமூகம் வீட்டுரிமை பிரச்சினையை அவ்வப்போது ஆட்சியாளர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்த போதும், இந்த அடிப்படை உரிமை பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை.

1987ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்தடுத்து ஆட்சி பொறுப்பில் இருந்த அரசாங்கங்கள் வெளிநாட்டு உதவிகளால் பெருந்தோட்டங்களில் அவ்வப்போது தனி வீடுகளைக் கட்டி, கடன் அடிப்படையில் 37,000 வீடுகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளன. இவ்வீடுகளுக்கான கடன்கள் திருப்பி செலுத்தப்பட்டுள்ள போதிலும் வீட்டு உரிமையாளர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

எனவே, மலையகத்தில் உள்ள 37,000 வீடுகளுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்குமாறு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவும் பொதுமக்களுக்கு இந்த வீட்டுரிமைப் பிரச்சினைப் பற்றி தெளிவூட்டவும் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகமும் சிவில் அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

# எட்டாம் திகதி தமிழ்மொழி தினப் போட்டிகள்

■ மெய்யன்

இவ்வாண்டுக்கான மத்திய மாகாண தமிழ்மொழி தினப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மத்திய மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சத்தியேந்திரா தலைமையிலும் மாகாண கல்விப் பணிப்பாளர் பி. அமரசிரி பியதாஸவின் வழிகாட்டலிலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி மாகாண எழுத்தாக்கப்போட்டிகள் நடைபெற்று முடிவடைந்த நிலையில், தரம் 10,11,12 ஆம் 13 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த 4,5 ஆகிய பிரிவுகளுக்கான 29 தனி மற்றும் குழுப் போட்டிகள் அன்றைய தினம் நடைபெறவுள்ளன.



சம்பள உயர்வு கோரி

# தோட்ட சேவையாளர் சங்கம் போராட்டம்

■ எஸ்.கணேசன்

70 சதவீத சம்பள உயர்வைக்கோரி, இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் நேற்று முன்தினம் (1) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில், நாடு தழுவிய ரீதியில் உள்ள இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தலவாக்கலை, மல்லியப்பு கோவில் சந்தி பகுதியில் ஆரம்பமான பேரணி, தலவாக்கலை நகரை வந்தடைந்து, அங்கு பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு மற்றும் தொழில்சார் சலுகைகளை வலியுறுத்தும் பதாகைகளை தாங்கியவாறு சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் நேற்று முன்தினத்துடன் (30) காலாவதியானது. இந்நிலையில், தற்போதைய வாழ்க்கைச் சுமைக்கேற்ப 70 சதவீத சம்பள உயர்வு வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வலியுறுத்துகின்றது.

எனினும், 24 சதவீத சம்பள உயர்வை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் முன்வந்துள்ளது. இதனை ஏற்க மறுத்தே, தமது கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் இடம்பெறுகின்றது.

தோட்டக் கம்பனிகளின் லாபம் மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சம்பள உயர்வை வழங்கக்கூடியதாக இருக்கும் என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் பல இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.



எல்டப் மேற்பிரிவு தோட்டத்தின்

# தொழிற்சங்கப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது

நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த எல்டப் மேற் பிரிவு தொழிற்சங்க பிரச்சினைக்கு சுமூகமாக தீர்வு காணப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

எல்டப் மேற்பிரிவு பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்ந்தும் முகம் கொடுக்கின்ற தொழில் பிணக்குகளுக்கு தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், அங்கு கள விஜயம் மேற்கொண்டதோடு தோட்ட முகாமையாளர்கள் உத்தியோகத்தர்களுடன் விசேட கலந்துரையாடலும் தோட்டத் தொழிலாளர்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது, தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தோட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியதுடன், பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்து வைப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குள் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுமென தோட்ட அதிகாரி உறுதியளித்ததாக வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவித்துள்ளார்.



# மொனராகலையிலும் கையெழுத்திடப்பட்டது

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் (2) மொனராகலை பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி, இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் 'காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரை'யில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டப் பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால்

# தோட்டங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு

■ சுதத்.எச்.எம்.ஹேவா

பெருந்தோட்டப் பெண்களில் ஆகக் கூடுதலானவர்கள் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்லும் நிலையில், தோட்டப் புறங்களில் பெண் பிள்ளைகள் பாரிய துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி வருவதாக ப்ரடக்ட் அமைப்பின் உப தலைவர் கே. மைதிலி தெரிவித்துள்ளார்.

ஹட்டனிலுள்ள ப்ரடக்ட் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,




தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இடையே நிலவும் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளால், பெருந்தோட்டப் பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதால், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகி வருவதுடன் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றார்.

பெருந்தோட்டப் பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால், அந்தப் பெண்களின் பெண் பிள்ளைகள், பிள்ளைகளின் தந்தை, தாத்தா, சகோதரர்களால் பலவிதமான வன்கொடுமைகளுக்கு ஆளாகும் வாய்ப்புகள் அதிகம். தோட்டங்களில் சில இளம் பெண்கள் தங்கள் தந்தை, தாத்தா மற்றும் சகோதரர்களால் கர்ப்பம் தரித்த நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன.

அவை மட்டுமன்றி ஹோட்டல்கள், வீடுகளில் பெருந்தோட்ட சிறுவர்கள் பணியாளர்களாக சேரும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றார்.

# மருத்துவ முகாம்

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வு, மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீக் தோட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, சிறுவர் மற்றும் முதியோருக்கு வைத்திய முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், இதில் 10 தோட்டங்களில் உள்ள சிறுவர் மற்றும் முதியோர் என சுமார் 700 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

(எஸ். கணேசன்)







# தும்புத்தடியால் பதம்பார்த்த அதிபருக்கு இடமாற்றம்

பாடசாலை மாணவியை தும்புத்தடியால் கடுமையான முறையில் தாக்கிய அதிபர், மத்திய மாகாண ஆளுநரான சட்டத்தரணி லலித் யு.கமகேயின் கட்டளையின் பிரகாரம் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாணவியின் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட கொட்டகல, பத்தனை, போகாவத்த சிங்கள மகா வித்தியாலயத்தின் அதிபர், உடனடியாக அமலுக்கு வரும் வகையில், நுவரெலியா கல்வி காரியாலயத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையில் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியின் மீது, 29ஆம் திகதி தும்புத்தடியால் தாக்குதல் நடத்தியதாக அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர், மத்திய மாகாண ஆளுநரால் மேற்கண்டவாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு மத்திய மாகாண கல்வியமைச்சரின் செயலாளருக்கும் ஆளுநரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி, டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு மாணவரிடமும் 300 ரூபாய் அறவிடப்பட்டுள்ளது. அதனை செலுத்த தவறிய தன்னுடைய சகோதரனை அந்த அதிபர் தூஷணத்தால் திட்டியுள்ளார். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத சகோதரியான மாணவி, தட்டிக்கேட்டதை அடுத்தே, தும்புத்தடியால் அம்மாணவியை அந்த அதிபர் பதம் பார்த்துள்ளார்.

அதிபரின் இந்தத் தாக்குதல்களுக்கு ஊடகங்களின் ஊடாக கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உடல், உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் தண்டனை வேண்டாம்

ஒவ்வொரு துறையிலும் ஓர் அடியேனும் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்றால், பாடசாலைகளில் தங்களுக்குக் கற்பித்த ஆசான்கள்தான் முதல் காரணமானவர்கள். அவர்களை என்றென்றும் மறந்துவிடவே கூடாது. அவர்களால் இடப்பட்ட படிக்கற்களில், (முன்)ஏறிக்கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

முன்னைய காலங்களில், பாடசாலையில் இருந்த கண்டிப்பு காரணமாக, ஒழுக்கமான சமூகமொன்றையும் நல்ல மனிதர்களையும் உருவாக்க முடிந்தது. அந்தக் கண்டிப்பு ஒரு பார்வையால், சொல்லால், ஒரு சிறிய தண்டனையால் வழங்கப்படும். அவ்வாறான ஆசான்களை இன்னுமே பலரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இன்றைய காலங்களில் ஆசிரியர்களால் வழங்கப்படும் ஒருசில தண்டனைகள், ஆசிரியர்கள் மீதான வெறுப்பை தோற்றுவிக்கிறது. மாணவர்கள் இடைவிலகுவதற்கு ஒரு காரணமாகவும் அமைகின்றது. அதுமட்டுமன்றி, மனித உரிமைகளை மீறுவனவாய் அமைந்துள்ளன. அது கவலைக்குரிய செயற்பாடாகும்.

கிராமங்கள், தோட்டங்களில் மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் 'டிமிக்கி' கொடுத்தால், அவரகளின் வீடுகளுக்கே சென்று, அவ்வாறானவர்களை அழைத்துவந்து கற்பிக்கும் ஆசிரியர் சமூகம் ஒன்று இருந்தது. ஓரிரு பிரதேசங்களில் அவ்வாறு இன்றும் செய்துகொண்டுதான் இருக்கின்றனர்.

பாடசாலைக்கு பகலுணவாக தேங்காய் சொட்டுகளைக் கொண்டுவந்த மாணவிக்கும், தங்களுடைய செலவில் பகலுணவு கொடுத்த ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். நன்றாகக் கற்கும், ஏனைய துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஆசான்கள் உதவி செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

இந்நிலையில்தான், நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கொட்டகலை, போகாவத்தை பாடசாலையில் இடம்பெற்ற சம்பவம், ஆசிரியர் சமூகத்தின் மீது கரும்புள்ளியை இட்டுள்ளது. ஒக்டோபர் ஐந்தாம் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடுகின்றது. இந்தத் தினத்தில் ஆசிரியர்களின் சேவை, கல்விப் பணியில் அவர்களின் பங்களிப்பு அங்கிகரிக்கப்படுகிறன.

அன்றைய தினத்தில் ஆசிரியர்களை கௌரவித்து, நிகழ்ச்சிகளை செய்வதற்காக மாணவர் ஒருவரிடமிருந்து 300 ரூபாயை அந்த அதிபர் கேட்டுள்ளார். அப்பணத்தை கொடுக்க முடியாத தனது சகோதரனை அந்த அதிபர் தூஷண வார்த்தைகளால் திட்டியுள்ளார்; தட்டிக் கேட்ட சகோதரியான மாணவியை, தும்புத்தடியால் கடுமையாக தாக்கியதாக சொல்லப்படுகின்றது. குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர் விசாரணைகள் நிறைவடையும் வரையிலும், தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக, ஒவ்வொரு குடும்பமும் தலைத்தூக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில், சில விழாக்களை தவிர்த்துவிடலாம். ஆசிரியர் தினத்துக்கு மாணவர்களிடமிருந்து பணத்தை திரட்டிதான் கொண்டாட வேண்டும் என்ற மனப்பாங்கை கைவிடவேண்டும்.

ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழவேண்டும். ஒரு சிலரின் செயற்பாடுகள் முழு சமூகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறே பதமாகப் பார்க்கப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்க!


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகர தெருக்களில், பொது இடங்களில் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும், வெற்றிலையை வாயில் சப்பியவாறு உமிழ்நீரை, பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள்; மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள் இவர்கள்!

முக்கியமாக, பஸ் தரிப்பிடங்களுக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்தவித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலை -பாக்கு எச்சிலை துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய அரசியலில் ஒற்றுமையின்மை



என். கே அஷோக்பரன்
twitter: @nkashokbharan

பலரும் எழுதி எழுதி சலித்துப் போனதொன்றை, மீண்டும் மீண்டும் எழுத வைப்பதுதான் தமிழ் அரசியல்வாதிகளின் சதி. 'குன்றக் கூறல்; மிகைபடக் கூறல்; கூறியது கூறல்' ஆகியவை குற்றம் என்கிறது நன்னூல்.

ஆனால், எப்படிச் சொன்னாலும், எத்தனை முறை சொன்னாலும் புரியாதது போலவே நடிக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு, வேதாளத்தின் கேள்விகளும் பதில் சொல்லும் விக்கிரமாதித்தனாய், சற்றும் மனந்தளராது, மீண்டும் மீண்டும் கல் செதுக்குவது போல, அது உருப்பெறும் வரை செதுக்கிக்கொண்டே இருக்க வேண்டியது தார்மிகக் கடமையாகிறது.

இலங்கையில், தமிழ்த் தேசிய அரசியல் என்பது, தற்காப்புத் தேசியமாகவே உருவாகியது. அது, சிங்கள- பௌத்த பெரும்பான்மை இன-மத தேசியத்துக்கு எதிராக, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே, தமிழ்த் தேசியம், ஈழ மண்ணில் விதைகொண்டு, வேர்விட்டது.

அதனால்தான், ஏ.ஜே வில்சன் உள்ளிட்ட ஆய்வாளர்கள், இதைத் 'தற்காப்புத் தேசியம்' என்கிறார்கள். சாதிகள் சேர்க்கையாக, சாதி ரீதியாகக் கட்டமைந்திருந்த தமிழ்ச் சமூகத்திடையே, 'தமிழர்' என்ற அடையாளத்தை முன்னிறுத்தி, அவர்களை ஆக்கிரமிப்புச் செய்ய, பேரினவாதத் தேசியம் முயன்றதன் எதிர்விளைவாக, அதே 'தமிழர்' என்ற தேசிய அடையாளத்தின் கீழ், தமிழ் மக்கள் ஒன்றிணைந்தமையை நாம் காணலாம்.

'தமிழ்த் தேசியம்', இலங்கைத் தீவின் அரசியலில் மட்டுமல்ல, தமிழ் மக்கள் என்ற இனக்கூட்டத்தின் கட்டமைப்பிலும் போக்கிலும் சிந்தையிலும் கூட, மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. சாதி ரீதியிலான அடையாளத்தை மேவி, இனத்தேசிய அடையாளம் முன்னிறுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியத்துக்கான தேவை, சிங்கள-பௌத்த தேசியத்தின் எழுச்சியால், அது 'தமிழர்' மீது ஏற்படுத்திய அடக்குமுறையால் எழுந்ததாகும்.

1956இல் இருந்து, தமிழ்மக்கள் ஏகோபித்து, தமிழ்த் தேசியத்துக்கான தமது அங்கிகாரத்தையும் மக்களாணையையும் வழங்கி வந்திருக்கிறார்கள். இது, ஆறு தசாப்த காலத்துக்கும் மேலான, தமிழ் மக்களின் மக்கள் விருப்பத்தைப் பறைசாற்றி நிற்கிறது. கருத்தியல் வாதங்களால், இந்த யதார்த்தத்தை, மறுத்துவிட முடியாது.

இதனால்தான், திம்பு கோட்பாடுகளின் முதல் கோட்பாடான, 'இலங்கை தமிழர், ஒரு தேசமாக அங்கிகரிக்கப்பட வேண்டும்' என்பது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் முதன்மைமிக்கதாக இருக்கிறது.

இந்த முழக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், தமிழ்த் தேசிய கட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசிய கட்சிகளிடையே, கருத்தியல் ரீதியிலான முரண்பாடு என்பது, தமிழ்த் தேசிய கொள்கையின் தீவிரத்தன்மை சார்ந்ததாகவே இருக்கிறதேயன்றி, தமிழ்த் தேசிய அடிப்படைகளை, குறைந்த பட்சம், தமது உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடனங்களில் ஒரே மாதிரியானதாகவே பறைசாற்றி வருகின்றன.

அப்படியானால், ஏன் அவற்றால் ஒற்றுமையாகச் செயற்பட முடியவில்லை? இதற்கு, குறைந்த பட்சம் இரண்டு காரணங்களை அடையாளம் காணலாம்.

முதலாவது, கொள்கை தொடர்பான நேர்மையின்மை.

இரண்டாவது, சுயநலம்.

தமிழ்த் தேசியம் என்பதையும் அதன் அடிப்படைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றையும் முன்னிறுத்தி, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவற்றைக் குறிப்பிட்டு, அந்தத் தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலர்களாகத் தம்மை முன்னிறுத்தும் அரசியல்வாதிகள், தமிழ்த் தேசியத்தை வாக்குப் பெறுவதற்கான ஒரு சாதனமாகவே பார்க்கிறார்களேயன்றி, அதன் மீதான உண்மைப் பற்றுதல் அவர்களுக்கு இல்லை.

அடிப்படையில் தாராளவாதிகளான சிலர் கூட, இன்று தமிழ்த் தேசியத்தின் தலைமைகளாகத் தம்மை முன்னிறுத்துகிறார்கள். அவர்களுக்கு, 'தமிழ்த் தேசியம்' என்பது வாக்குப் பெற்று, தமக்கான பாராளுமன்ற பதவி பெறுவதற்கான ஒரு கருவி; அவ்வளவுதான்!

தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சியில், அதன் விஞ்ஞாபனத்தின் கீழ், தமிழ்த் தேசிய ஆதரவு வாக்குகளைப் பெற்றும், தமிழ்த் தேசத்தின் பிரதிநிதிகளாகத் தெரிவானவர்கள், தமிழ்த் தேசியத்தை விடுத்து, சிவில் தேசிய அரசியல்வாதிகளாகத் தம்மைப் பாவித்துக் கொண்டும் வருகிறார்கள்.

ஒருவர் அடிப்படையில், சிவில் தேசியத்தை விரும்பும் தாராளவாதியாக இருக்க விரும்பினால், நல்லது! அவர் அதைச் செய்யலாம். ஆனால், நேர்மை என்பது, அதை நேர்மையாக மக்களிடம் சொல்லி, அந்தக் கொள்கையை முன்னிறுத்தும் கட்சியில் இணைந்து, அந்தக் கொள்கையை முன்னிறுத்தி தேர்தலில் போட்டியிட்டு, அந்தக் கொள்கைக்கு மக்களாணை கிடைத்தால், அதைப் பெற்றுக்கொண்டு, அந்தக் கொள்கைப்படி நடப்பதாகும்.

ஆனால், தேர்தல் வெற்றிக்கு தமிழ்த் தேசியம்; வென்ற பின்னர், தாரளவாத சிவில் தேசியம் என்பதெல்லாம், அடிப்படையில் நேர்மையற்ற செயல். இதுதான் இன்று, தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடாக மாறியுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் நன்மைகளை எல்லாம் பெற்றுக்கொண்டு, தமிழ்த் தேசியத்துக்கு விரோதமாகச் செயற்படும் குழாமொன்று, தமிழ்த் தேசிய அரசியலை ஆக்கிரமித்துள்ளதன் விளைவுதான், இன்று தமிழ்த் தேசிய அரசியலுக்குள் உட்கட்சி முரண்பாடுகள் வலுத்துள்ளன.

தமது சுயநல அரசியலுக்காக, கொள்கை ரீதியான வாதப்பிரதிவாதங்களுக்குப் பதிலாக, தமிழ்த் தேசிய அரசியலைத் தனிநபர்கள் பற்றிய 'குழாயடிச் சண்டை'க்களமாக மாற்றி இருக்கிறார்கள். இதன் விளைவுதான் இன்று தமிழ்த் தேசிய அரசியல், நடுச்சந்தியில் நாறிக்கொண்டு கிடக்கிறது.

"தேசம் என்பது, ஓர் உணர்வாகும். இறுதியாக நாம், ஒரு தேசத்தின் உறுப்பினர்களானவர்கள், உணர்ச்சிப் பெருக்குடனும் ஏகமனதாகவும் தம்மை ஒரு தேசமாக நம்புவதால், நாம் அதைத் தேசமென்று கருதமுடியும்" என்கிறார் றாம்சே மயர். இந்த உணர்வு, அடிப்படையிலேயே இல்லாதவர்கள், எப்படி அந்தத் தேசத்தின் பிரதிநிதிகளாக முடியும்?

தாராளவாதம், இன-மதத் தேசியவாதத்துக்கு முற்றிலும் முரணானது. அது இன-மதத் தேசியவாதத்தை நிராகரிக்கின்றது. ஆகவே, ஒருவர் தாராளவாதியாகவும் இன-மதத் தேசியவாதியாகவும் இருக்க முடியாது. தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசிய முகம்; தெற்குக்கும் சர்வதேசத்துக்கும் தாராளவாத முகம் என்று இருப்பவர்கள், ஒருபோதும் இரண்டுக்கும் நேர்மையாக இருக்க முடியாது.

ஆகவே, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தாராளவாதிகளின் ஆதிக்கம், தமிழ்த் தேசிய அரசியலுக்குப் பெரும் சவாலாக மாறியிருக்கிறது. இங்கு, கொள்கை வாதப்பிரதிவாதங்களைத் தவிர்த்து, தனிநபர்கள் பற்றிய 'குழாயடிச் சண்டை'களுக்கும் இதுவே வழிவகுப்பதாக இருக்கின்றது. இதைத் தமிழ் மக்கள் உணர வேண்டியது அவசியம்.

மறுபுறத்தில், கொள்கை ஒன்றாக இருந்தாலும், தேர்தல், பதவி என்ற சுயநல காரணங்கள் எப்போதும் தமிழ்த் தேசிய அரசியலைத் துண்டாடி வந்திருக்கிறது. இன்றைக்கு தமிழ்த் தேசிய அரசியலில், தமிழ்த் தேசியவாதிகளிடையே ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகள் இதன்பாற்பட்டவை ஆகும்.

யார் தலைவர், யாருக்குப் பதவி என்ற அடிபாடுகளுக்காகப் பிரிந்து, ஒரு கொள்கையில் ஒன்றுபட்டிருந்த ஆதரவாளர்களை, தனிநபர்களின் சண்டைகளுக்காக, தனிநபர்களின் ஆதரவாளர்களாக மாற்றி, ஒருவரை இன்னொருவர் தூசித்துக்கொண்டும், அடிதடிப்பட்டுக் கொண்டும் தம்மைத் தாமே அசிங்கப்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலின் பலம் என்பது, அதற்கு மாற்றான எல்லாத் தரப்புக்கும் மிகச்சவாலன ஒன்றாகும். ஆகவே, தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்துவது என்பதே, தமிழ்த் தேசிய அரசியலுக்கு மாற்றான சக்திகளின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஒற்றுமை இன்மையென்பது, தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்துவதை இலகுப்படுத்துவதாகவே அமைகிறது. ஒரு குறிப்பிட்ட கொள்கையை முன்னிறுத்தும் தலைவர்கள் மீது மக்கள் நம்பிக்கையிழக்கும் போது, அந்தக் கொள்கை மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்குகிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலின் உட்கட்சிச் சண்டைகளும் பூசல்களும், வேறுபட்ட குழுக்களிடையேயான 'குழாயடிச் சண்டை'களும், தமிழ்த் தேசியம் மீது தமிழ் மக்களுக்கு சலிப்பை உண்டாக்குவதாகவும் வெறுப்பை உருவாக்குவதாகவும் அமைகிறது.

அப்படியானால், இது தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த எண்ணும் சக்திகளுக்கே சாதகமாக அமைந்துவிடுகிறதல்லவா! ஆகவேதான், தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சக்திகள், விழித்துக்கொள்ள வேண்டிய காலம் என 'பள்ளியெழுச்சி' பாடப்படுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், மீண்டும் உண்மையான தமிழ்த் தேசிய அமைப்புகளிடையே பலமானதோர் ஒற்றுமை கட்டியமைக்கப்பட வேண்டியமை, காலத்தின் தேவையாக எழுந்திருக்கிறது. இதைத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் சரிவரச் செய்யாது விட்டால், தமிழ்த் தேசியத்தின் மீது தமிழ்த் தேசம் நம்பிக்கை இழந்துவிடும்.

## கடிதங்கள்

### மடுவில் யானைகளால் பதற்றம்

மன்னார் மாவட்டம், மடு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெரியபண்டிவிரிச்சான், சின்ன பண்டிவிரிச்சான் கிராமங்களில், அண்மைக்காலமாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை (23) சின்னப்பண்டிவிரிச்சானில் தனியார் ஒருவரின் காணிக்கு பின்னால் நின்றிருந்த யானை, 54 வயது மதிக்கதக்க 'வாவா' என்று அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் ஸ்டான்லி என்பரைத் தாக்கி கொன்றுள்ளது.

மேலும், பெரியபண்டிவிரிச்சான் பகுதியில், கடந்த வாரம், வயல் வெளிக்கு அருகில் இருக்கும் வீட்டுக் காணிகளுக்குள் புகுந்த யானை, பெறுமதிமிக்க மரங்களைச் சேதப்படுத்தி வருகின்றது.

இதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை (30) அதிகாலை, பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தின் நடுப்பகுதி காணிகளுக்குள் யானை உட்புகுந்து, அட்டகாசம் செய்து வருகின்ற நிலையில், மக்கள் அச்சத்தில் வீதிக்கு வந்துள்ளனர்.

அன்றிரவுவரை, மடு வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து, யானையை காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். மேலும், இக்கிராமங்களில் யானைகளின் தொல்லைகள், அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதால், யானை வேலி போன்றவற்றை அமைத்தும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, குறித்த கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எஸ். றொசேரியன் லெம்பேட்

# தெற்காசியாவின் முதல் கடலடி கேபிள் நிலையத்துக்கு ஜூலி சங் விஜயம்



இலங்கையை உலகுடன் இணைக்கும் பணிகளில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL ஆற்றும் முக்கிய பங்களிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், காலியில் நிறுவியுள்ள தெற்காசியாவின் முதலாவது கடல் கீழ் கேபிள் நிலையத்தை, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பார்வையிடும் வசதியை ஏற்படுத்தியிருந்தது.

சிங்கப்பூர் டெலிகொம் மற்றும் பிரான்ஸ் ஒரேன்ஜ் மரின் ஆகியவற்றின் இணை நிறுவனமான, இந்தியன் ஓஷியன் கேபிள் சிப் பிரிஈ லிமிடெட் உடன் இணைந்து கோல் சப்மரின் கேபிள் டிபோ பிரைவட் லிமிடெட்டை SLT நிறுவியிருந்தது. 2018ஆம் ஆண்டில் இந்த நிலையம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன், தெற்காசிய பிராந்தியத்தில் காணப்படும் இந்த வகையைச் சேர்ந்த ஒரே நிலையமாகவும் அமைந்துள்ளது.

இந்த நிலையத்தின் அங்கமாக, கேபிள் பழுதுபார்ப்பு நிலையமான ஏசியன் ரிஸ்டோரர் காலியில் அமைந்துள்ளது. இந்த டிபோவின் அமைவிடத்தினூடாக, காலியை அண்மித்ததாக, ஐரோப்பா முதல் ஆசியா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கான கடலடி கேபிள்கள் நிறுவப்பட்டுள்ளதால், துரிதமாக கடலடி கேபிள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை முன்னெடுக்க உதவியாக அமைந்துள்ளது. கடலடி கேபிள் பழுதுபார்ப்புகளை முன்னெடுப்பதற்கு அவசியமான மேலதிக கேபிள்களையும் அவசியமான சாதனங்களையும், பரிசோதனைக் கருவிகளையும் இந்த நிலையம் கொண்டுள்ளது.

ஐந்து சர்வதேச கடலடி கேபிள் கட்டமைப்புகளான SEA-ME-WE 3, SEA-ME-WE 4, SEA-ME-WE 5, Bharat Lanka மற்றும் Dhiraagu-SLT ஆகியவற்றுடன் இணைத்துள்ளதனூடாக, இலங்கையின் இணைப்புத்திறனை தொடர்ச்சியான வியாபிக்கும் பணிகளை SLT-MOBITEL முன்னெடுக்கின்றது.

SLT-MOBITEL இன் சர்வதேச வலையமைப்புக்கமைய, முன்மொழியப்பட்டுள்ள SEA-ME-WE 6 கடலடி கேபிள் கட்டமைப்பு, தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா பகுதிகளினூடாக அமைந்திருக்கும். செக்கனுக்கு 100 டெராபைட்களுக்கு அதிகமான கொள்ளளவை மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டளவில் இதன் நிறுவும் பணிகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கேபிள் கட்டமைப்பை செயற்படுத்துவது என்பது எதிர்காலத்தில் சிறந்த வீடியோ மற்றும் ஊடக உள்ளம்சங்களில் கவனம் செலுத்துவதில் SLT-MOBITEL க்கு முக்கியமானதாக அமைந்திருக்கும். SLT-MOBITEL இன் 5G வலையமைப்பின் முக்கிய அங்கமாக இந்தக் கேபிள் வலையமைப்பு அமைந்திருப்பதுடன், தொழிற்றுறைகளுக்கு குறைந்த உள்மறை இயந்திரத்தினூடாக இயந்திர தொடர்பாடல்களையும் வழங்குகின்றது. SEA-ME-WE 6 கேபிளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதனூடாக, இலங்கையின் சர்வதேச இணைப்புக் கொள்ளளவை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளது. இதனூடாக, SLT-MOBITEL இனால், டேட்டா போக்குவரத்தில் பெருமளவு வளர்ச்சியை எதிர்கொள்வதற்கு தயார்நிலையில் இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# எயார்டெல் லங்கா கட்டணத்தைக் குறைக்கிறது

நாடு முழுவதிலுமுள்ள 24 மாவட்டங்களுக்கும் தமது தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதற்காக அதன் நாடு தழுவிய 4G ஐ அறிமுகப்படுத்தியதன் பின்னர், எயார்டெல் லங்கா தனது அனைத்து பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து வலையமைப்புகளுக்கும் வரையறையற்ற அழைப்புகளை அறிமுகப்படுத்திய முதல் தொலைத்தொடர்பு நிறுவனமாகும். இந்த ஆண்டின் தொடக்கத்தில், முற்கொடுப்பனவு பாவனையாளர்களுக்கு Freedom Unlimited Packகள் மூலம் எந்தவொரு வலையமைப்பிற்கும் வரையறையற்ற அழைப்புகளை எயார்டெல் அறிமுகப்படுத்தியது

வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்கும் பணியின் ஒரு பகுதியாக, Airtel இன் Unlimited Freedom பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களில் சமீபத்தில் Unlimited 1,098 பெக்கேஜ் அறிமுப்படுத்தப்பட்டது. ரூ.1,098 பெறுமதியில், புதிதாக வடிவமைக்கப்பட்ட இந்த Unlimited பெக்கேஜ் மூலம், பிற்கொடுப்பனவு பாவனையாளர்கள் எந்த வலையமைப்புக்கும் வரையறையற்ற அழைப்புகளை அனுபவிக்க முடியும்.

airtel
THE 5G READY NETWORK

மேலும் 40GB 4G டேட்டாவுடன் முழு HD தரமான வீடியோ மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் SMS வசதிகளுடன் எந்த வலைப்பின்னலுக்கும் மாதத்திற்கு போதுமானதாக இருக்கும்.

மேலும், எயார்டெல் மட்டுமே பிற்கொடுப்பனவு பயனர்களுக்கு 'Data Rollover' வசதியைத் தொடர்ந்து வழங்கும் ஒரே தொலைத்தொடர்பு நிறுவனமாகும். இது மாதத்தின் பயன்படுத்தப்படாத டேட்டாவை அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதுடன், ஒரு பாவனையாளரின் Data செலவுகளைச் சேமிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. பாவனையாளர்கள் 200GB வரையிலான டேட்டாவை சேமிக்க முடியும். இது தடையற்ற HD தரமான சமூக ஊடகங்கள், வீட்டிலிருந்து வேலை செய்வது மற்றும் பதிவிறக்கம் செய்ய உதவுகிறது.

தனிநபர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஏற்றதாக, எயார்டெல்லின் வரையறையற்ற திட்டங்கள் அதன் பயனர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளன. மிக உயர்ந்த தரமான அழைப்பு வசதிகள் மற்றும் மொபைல் Data சேவைகளை வழங்குவதுடன், எயார்டெல்லின் 1,098 பேக்கேஜ் மாதாந்த தொலைத்தொடர்புச் செலவினங்களில் குறைந்த பட்சம் 50%ஐ குறைக்கிறது.

"ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் நியாயமான ஒப்பந்தத்திற்கான அணுகலை உறுதிசெய்து, எங்கள் பாவனையாளர்கள் அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த Mobile Broadband அனுபவத்தை வழங்குவதை உறுதிப்படுத்தும் புத்தாக்கங்களை உருவாக்குவதே எயார்டெல்லின் நோக்கம். எங்கள் முற்கொடுப்பனவு பயனர்கள் வரையறையற்ற சலுகைகளுக்காக, குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது, எங்கள் முற்கொடுப்பனவு பயனர்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளனர், மேலும் எங்கள் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு இதுபோன்ற மதிப்புமிக்க வாய்ப்புகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷீஷ் சந்திரா தெரிவித்தார்.

## மகாத்மாவின் கொள்கைகளே

# சர்வதேச சவால்களுக்கு தீர்வு



காந்தியடிகளின் பிறந்த நாளான, ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி 'சர்வதேச அஹிம்சை' தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இது குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்டுள்ள பதிவில் "அமைதியான, சகிப்புத்தன்மை மிக்க உலகத்தைக் காணவே காந்தியடிகள் விரும்பினார்.

அமைதி, பரஸ்பர மரியாதை உள்ளிட்டவற்றுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். ஆனால், தற்போது அக்கொள்கைகளை உலகம் பெருமளவில் மதிப்பதில்லை.

உலகில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. அத்துடன் ஏழ்மை, பசி, சமத்துவமின்மை, வெறுப்பு ர்வைத் தூண்டும் பேச்சுகள், இனவெறி உள்ளிட்ட பல்வேறு சவால்களை உலகம் சந்தித்து வருகிறது.

அவற்றுக்கு காந்தியடிகளின் கொள்கைகள் வாயிலாகத் தீர்வுகாண முடியும். உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

புதுடெல்லி

# அனைவருக்கும் விரைவில் 5G

புதுடெல்லியில் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்ற இந்திய மொபைல் காங்கிரஸ் (IMC) மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, இந்தியாவில் உள்ள 13 பெருநகரங்களில் 5G இணையச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.




இந்நிலையில் குறித்த மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ் ஜியோவின் (Reliance Jio ) தலைவர் முகேஷ் அம்பானி, "புதுடெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, உள்ளிட்ட நகரங்களில் வரும் தீபாவளிக்குள் 5G சேவையை செயற்படுத்தவுள்ளதாகவும், 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் இந்தியா முழுவதும் 5 G சேவையை நிறுவப்படும்" என்று தெரிவித்தார்.

அத்துடன் 5ஜி சேவை மூலம் கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ள சாதாரண மருத்துவமனைகளை, ஸ்மார்ட் மருத்துவமனைகளாக மாற்ற முடியும். இதனால், அனைத்து மக்களும் உயர்தர மருத்துவ சேவையைப் பெற முடியும். அதிவேக இணையத்தின் மூலம், இந்தியா எங்கும் உள்ள மருத்துவர்கள், நோயாளிகளுக்கு ஒன்லைன் மூலம் விரைவாகவும், தெளிவாகவும் சிகிச்சையளிக்க முடியும்" எனவும் தெரிவித்தார்.

உத்தர பிரதேசம்

## தொடரும் குளியலறை வீடியோ சர்ச்சை:

# வலுக்கும் மாணவிகளின் போராட்டம்

உத்தரப் பிரதேசத்தின் கான்பூரில் உள்ள விடுதியொன்றில் மாணவிகள் குளித்துக் கொண்டிருந்தபோது, அதனை அங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவர் வீடியோ எடுத்துள்ளதாக அவ்விடுதியைச் சேர்ந்த பெண்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்த போதும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி, மாணவிகள் செப்டெம்பர் 29 ஆம் திகதியிலிருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டம் வலுத்துள்ள நிலையில், குறித்த விடுதி ஊழியரைக் கைது செய்த பொலிஸார், அவர் மீது வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருவதாகவும், அவரது அலைபேசியை தடயவியல் ஆய்வுக்கு அனுப்பி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

சில நாள்களுக்கு முன்னர், சண்டிகர் பல்கலைக்கழக மாணவிகள் விடுதியில், மாணவி ஒருவர், ஏனைய மாணவிகள் குளிக்கும்போது ஆபாசமாக வீடியோ எடுத்து, பலரிடம் பகிர்ந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.


ஆனால், பொலிஸார் தரப்பில், அப்பெண்ணின் வீடியோவை மட்டுமே அவர் மற்றொருவரிடம் பகிர்ந்ததாக கூறப்பட்டது. இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள சிறப்பு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

இவ் வழக்கில், அப் பெண் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மாமல்லபுரம்

# தாஜ்மஹாலை தள்ளிய மாமல்லபுரம்



இந்தியாவில் காணப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தளங்களைப் பார்வையிட ஆண்டுதோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை அதிகமான வெளிநாட்டுப் பயணிகள் வருகை தந்த சுற்றுலாத் தளங்களின் பட்டியலை சுற்றுலாத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதில் 45.5 சதவீதமானோர் (1,44,984 பேர்) மாமல்லபுரத்தையும், 12.21 சதவீதமானோர் (38,922 பேர் ) தாஜ்மகாலையும், 25,579 பேர் சாளுவன்குப்பம் புலிக்குடைவரையையும் பார்வையிட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இப்பட்டியலில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்திலும், உத்தரபிரதேசம் 2ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசம்

# 63 கரண்டிகளா?

## அதிர்ச்சியில் உறைந்த வைத்தியர்கள்



உத்தரப் பிரதேசத்தின் முசாபர்நகரில் வசித்து வருபவர் விஜயகுமார். 32 வயதான இவர் அண்மையில் தீவிர வயிற்று வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவரின் வயிற்றில் ஏராளமான கரண்டிகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

விசாரணையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் குறித்த நபர் போதை ஒழிப்பு மையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் எனவும், அப்போது அவரைக் கட்டாயப்படுத்தி,அங்கிருந்த அதிகாரிகள் கரண்டிகளை உட்கொள்ள வைத்துள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அவருக்கு சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன்போது அவரின் வயிற்றில் இருந்து தலைகள் இல்லாத 63 கரண்டிகளை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஹங்கேரி

வாழ்க்கைச் செலவைக் குறைக்க

# கூடார வாழ்க்கை

ஹங்கேரியில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினை எதிர்கொள்ளும் விதமாக மக்கள் கூடாரங்களில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஹங்கேரியில் தற்போது 1000 க்கும் மேற்பட்ட கூடாரங்கள் இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக நிரந்தர தங்குமிடமாகக் கூடாரங்களைத் தேர்ந்தெடுப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.



அமெரிக்கா


# மருத்துவர்களின் கணிப்பைப் பொய்யாக்கிய சிறுவன்

அமெரிக்காவில் கிரானியோஃபேஷியல் டுப்ளிகேஷன் என்ற நோயால் பாதிக்கப்பட்டு இரு முகங்கள் மற்றும் இரண்டு தனித்துவமான நாசியுடன் கடந்த 2004 ஆம் ஆண்டு ட்ரெஸ் ஜோன்சன்'(Tres Johnson)என்ற சிறுவன் பிறந்துள்ளார்.

எனினும் இவர் பிறந்த போது `இவர் நீண்ட நாட்கள் உயிர் வாழமாட்டார்` என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வைத்தியர்களின் கணிப்பை பொய்யாக்கி ட்ரெஸ் ஜோன்சன் தனது 18ஆவது பிறந்த நாளை அண்மையில் கொண்டாடியுள்ளார்.

இது குறித்து அவரது தாய் பிராண்டி, "ஜோன்சனின் வாழ்க்கை மருந்துகளால் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது "எனத் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட எலோன்

உலகப் பணக்காரர்களின் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க் (Elon musk) அண்மையில் 'ஒப்டிமஸ்'(Optimus) என்ற மனித உருவிலான ரோபோவை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள டெஸ்லா அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றிலேயே அவர் குறித்த ரோபாவை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவ் ரோபோவானது ஒரு பொருளை ஓர் இடத்தில் மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் "ஒப்டிமஸை செம்மைப்படுத்த இன்னும் பல பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது எனவும், எங்களது இலக்கு விரைவில் பயனுள்ள மனித உருவ ரோபோவை உருவாக்குவதான் என்றும், ரோபோ வணிகம் கார்களை விட அதிக மதிப்புடையதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



ஆப்கானிஸ்தான்

கல்வி மையத்தில் குண்டுவெடிப்பு

# 32 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில், கடந்த 30 ஆம் திகதி கல்வி மையமொன்றில் நடத்தப்பட்ட பயங்கர குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது. சம்பவ தின்தன்று தஷ்ட்-இ-பார்ச்சி நகரில் செயற்பட்டு வரும் கல்வி மையத்துக்குள் நுழைந்த பயங்கரவாதி ஒருவர், தனது உடலில் கட்டிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்துள்ளார்.

இந்நிலையில் இக் குண்டு வெடிப்பில் மாணவர், மாணவிகள் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான்

# உணவை உட்கொண்ட 2 பெண்கள் கைது



ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறிக் கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண்ணொருவர் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்காக பெண்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்நிலையில் ஈரானில் உணவகமொன்றில் ஹிஜாப் அணியாமல் உணவருந்திய இரு பெண்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீப நாட்களாக ஈரானில் இப்போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரபலம் வாய்ந்த பலரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து வருகின்றனர்.

அந்தவகையில் கவிஞர் மோனா போர்ஜோயி, ஈரான் கால்பந்து வீரர் உசைன் மகினி, முன்னாள் ஈரான் ஜனாதிபதி அலி அக்பரின் மகள் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்னாப்பிரிக்கா

# கருணைக் கொலை



தென்னாப்பிரிக்காவின் கேப் டவுன் போல்டர்ஸ் கடற்கரையில், பறவைக் காய்ச்சல் பாதிப்புக்குள்ளான 25க்கும் மேற்பட்ட பெங்குயின்கள் உயிரிழந்துள்ளன.

பறவைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக உள்ள கேப் டவுனில், கிட்டத்தட்ட 3000பெங்குயின்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இந்நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, நோய்வாய்ப்பட்ட பெங்குயின்கள் கண்டறியப்பட்டுக் கருணைக் கொலை செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது



வீதிப் பாதுகாப்பு உலகத் தொடர்: இலங்கை லெஜன்ஸை வென்று

# சம்பியனான இந்திய லெஜன்ஸ்

வீதிப் பாதுகாப்பு உலகத் தொடரில் இந்திய லெஜன்ஸ் அணி சம்பியனானது.

றைபூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இலங்கை லெஜன்ஸ் அணியுடனான இறுதிப் போட்டியில் வென்றே இந்திய லெஜன்ஸ் சம்பியனானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 195/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நாமன் ஓஜா ஆ.இ 108 (71), வினய் குமார் 36 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: நுவன் குலசேகர 3/29 [3], இசுரு உதான 2/34 [4], தம்மிக பிரசாத் 0/31 [4])

இலங்கை: 162/10 (18.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷான் ஜயரத்ன 51 (22), மஹேல உடவத்த 26 (19), ஜீவன் மென்டிஸ் 20 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: வினய் குமார் 3/38 [3.5], அபிமன்யு மிதுன் 2/27 [4], ஸ்டூவர்ட் பின்னி 1/21 [3], ராகுல் ஷர்மா 1/15 [2])

போட்டியின் நாயகன்: நாமன் ஓஜா

தொடரின் நாயகன்: திலகரட்ண டில்ஷான்



# '837 போட்டிகளை நடாத்தியுள்ளேன்'

கடந்தாண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இதுவரை 837 சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளை நடத்தியுள்ளதாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்தார்.

உமர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "30 சுப்பர் லீக் போட்டிகள், 33 மாகாணப் போட்டிகள், 91 சம்பியன்ஸ் லீக் போட்டிகள், தங்கம்/வெள்ளிக் கோப்பை போட்டிகள் உட்பட நாடு பூராவும் 652 போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. அதன்படி கடந்தாண்டு முதல் நடைபெற்ற உள்நாட்டுப் போட்டிகளின் மொத்த எண்ணிக்கை 806 ஆகும். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற மொத்த சர்வதேசப் போட்டிகளின் எண்ணிக்கை 31ஆகும். தேசிய அணி 11 போட்டிகளில் பெண்கள் அணி இரண்டு போட்டிகளில், 23 வயதுக்குட்பட்ட அணி மூன்று போட்டிகளில், 19 வயதுக்கு கீழ்பட்ட அணி பெண்கள் அணி ஐந்து போட்டிகளிலும், 20 வயதுக்குட்பட்ட அணி ஏழு போட்டிகளிலும், 17 வயதுக்குட்பட்ட அணி மூன்று போட்டிகளிலும் பங்கேற்றுள்ளது. கட்டாரில் ஒன்பது நாள் பயிற்சி முகாம், சவுதி அரேபியாவில் 17 நாள் பயிற்சி முகாம், மீண்டும் கத்தாரில் 9 நாள் பயிற்சி முகாம் என மூன்று சர்வதேச பயிற்சி முகாம்கள் என்பனவும் நடத்தப்பட்டுள்ளன.

கடந்தாண்டு ஜூலை முதலாம் திகதிக்கு முன் 33 போட்டிகள் மட்டுமே நடாத்தப்பட்டன.

கால்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கு விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு போட்டி அனுபவங்கள் மிகவும் அவசியமானது என்றும், இலங்கையர்களுக்கு கிரிக்கெட் போலவே கால்பந்தையும் பிரபலமாக்குவதே தனது நோக்கமாகும்" என்று குறிப்பிட்டார்.



# இலங்கை அணிக்கான ஜேர்ஸி கையளிப்பு

அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் நவம்பர் 13ஆம் திகதி வரையில் நடைபெறும் இருபதுக்கு 20 உலகக்கிண்ண போட்டில் பங்கேற்பதற்காக இலங்கை அணி அங்கு சென்றுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணிக்கான ஜேர்ஸி, மேஸ் ஹோல்டிங் நிறுவனத்தால் செப்டெம்பர் 30ஆம் திகதியன்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி போட்டியில்

# காரைதீவு விபுலானந்தா சாதனை



வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாண பாடசாலைகளு க்கிடையிலான ஹொக்கி போட்டியில் வரலாற்றில் முதல் தடவையாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளது என்று கல்லூரி அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கி டையிலான ஹொக்கி போட்டிகள், விபுலானந்த மத்திய கல்லூரி(தேசிய பாடசாலை) மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியில், கிழக்கு மாகாணத்தில் இருந்து ஆக அம்பாறை மாவட்டம் சார்பில் நான்கு அணிகள் மாத்திரமே கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் காரைதீவு விபுலானந்தா அணியும், அம்பாறை டிஎஸ். சேனநாயக்க அணியும் மோதின.

இப்போட்டிகளில் 4-1 என்ற ரீதியில் முதலிடத்தை அம்பாறை டி.ஸ். சேனநாயக்கா கல்லூரி அணியினரும், இரண்டாமிடத்தை விபுலானந்த மத்திய கல்லூரி அணியினரும் பெற்றுக் கொண்டனர்.

வரலாற்றில் முதல் தடவையாக கலந்து கொண்டு முதல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற எஸ்.சு ஜாந்த் தலைமையிலான விபுலானந்தா அணியை தினமும் பயிற்றுவித்த காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணியினருக்கும், என்னோடு தோளோடு தோள் நின்று அணியை நெறிப்படுத்திய பயிற்றுவிப்பாளர்களான சுலக்ஸன் லோகதாஸ் ஆகியோருக்கும், வழிப்படுத்திய அதிபருக்கும் நன்றி கூறுவதாக கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் ஜெயநாதன் சோபிதாஸ் தெரிவித்தார்.

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தில்

# கிறவுண்ட் கோல்ப் ஆரம்பிப்பு



எஸ்.கே. குமார்

நுவரெலியா விளையாட்டுக் கழகம் ஆரம்பித்து 100 ஆண்டுகள் பூர்தியை முன்னிட்டு ஜப்பான் நாட்டில் பிரசித்தி பெற்ற கிறவுண்ட் கோல்ப்பை, இலங்கை கிறவுண்ட் கோல்ப் கழகத்தினர் நுவரெலியா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் ஆரம்பித்து வைத்தனர். அத்தோடு கோல்ப் விளையாட்டு உபகரணங்களையும் நுவரெலியா விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கி வைத்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 03 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.